# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.53/2024

dated : 14.10.2025

D.W.1

Name பெஞ்சமின் சாமுவேல்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்பதற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேன். நவநீதகிருஷ்ணனுக்கு இரண்டு மக்கள். அவர்களுக்கு எதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்று தெரியாது. நவநீதகிருஷ்ணன் வாரிசுகளிடமிருந்து வாங்கியதாக கூறப்படும் சொத்து அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று பட்டா மற்றும் அ பதிவேடு தவிர வேறு ஆவணங்களை பார்த்ததில்லை. சொத்தின் மீது முழு உரிமையில்லாத நபர்களிடமிருந்து கிரையம் பெற இயலாது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் பெற்ற சொத்து ஆதியில் நவநீதகிருஷ்ணன் குடும்பத்தின் பூர்விக சொத்துக்களாகும். அந்த சொத்துக்கள் நவநீதகிருஷ்ணன் மகன்களின் அனுபவத்தில் இருந்து வந்தது. மொத்த சொத்திற்கும் பட்டா மற்றும் அ பதிவேடு தவிர வேறு ஆவணங்கள் இல்லை. நாங்கள் பெற்ற கிரையம் நல்லெண்ணத்தில்

பெறப்பட்ட கிரையம் அல்ல என்றால் சரியல்ல. கிரையதாரர்களும் எங்கள் நிறுவனமும் கூட்டுச் சேர்ந்து மோசடியாக கிரைய ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அவை வாதிகளின் பாக உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.14 18:01:37 +0530